

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் திமுக ஓரணியில் தமிழ்நாடு ஒற்றுமை பேரணி மற்றும் பொதுக்கூட்டம் மீஞ்சூரில் மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் தலைமையில் நடைபெற்றது இதில் தேர்தல் பணிக்குழு செயலாளர் கடலூர் இள.புகழேந்தி கலந்துகொண்டு ஓரணியில் தமிழ்நாடு ஒற்றுமை குறித்து விளக்கி பேசினார். உடன் மு.பகலவன், சி.எச்.சேகர், பி.ஜெ.மூர்த்தி, மு.கதிரவன், க.சு.தமிழ் உதயன், கே.சுப்பிரமணி, ஜி.வி.ராமமூர்த்தி, பா.செ.குணசேகரன், வெங்கடாஜலபதி, கே.பரிமளம், வெ.அன்புவாணன், கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், ஏ.கே.சுரேஷ், ருக்மணி மோகன்ராஜ், டி.கே.சந்திரசேகர், கி.வே.ஆனந்த் குமார், ஆ.சத்தியவேலு, ஜான்பொன்னுசாமி, ஆ.ராஜா, மு.முரளிதரன், ஏ.ஆர்.டி.உதயசூரியன், ஜி.ரவிக்குமார், அபிராமி குமரவேல், பி. முழுமதி, இரா.அறிவழகன், ப.அலெக்சாண்டர், கே.வி.லோகேஷ், பா.து.தமிழரசன், கா.சம்பத், மு.பாஸ்கர், ஜி.சுமன், ஏ.கே.சம்பத் குமார், கிருஷ்ணமூர்த்தி, வி.பி.ரவிக்குமார், ஜி.ராஜேந்திரன், எஸ்.கணேஷ், வி.மோகன், ஸ்ரீஜோதி, கே.எஸ்.லெலின், கு.மணிமாறன், சாமிவேல், மதன்குமார், அன்சர், டில்லி, புருஷோத்தமன், மில்லர், டி.கே.முனிவேல், உள்பட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### ரூ.130 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும்

# செங்கல்பட்டு புதிய பேருந்து நிலையத்தின் கட்டுமானப் பணிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆய்வு!

சென்னை,ஜூலை.4- முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி இன்று (3.7.2025) காலை 6.00 மணியளவில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் ரூ.130 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் செங்கல்பட்டு புதிய பேருந்து நிலையத்தின் கட்டுமான பணிகளை துரிதப்படுத்தும் வகையில் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினார்.



**இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :**

செங்கல்பட்டு மாவட்டத்தில் புதிய புறநகர் பேருந்து நிலையம் திராவிட மாடல் ஆட்சி அமைந்த பிறகு, 10 ஏக்கர் நிலப்பரப்பில் புதிய புறநகர் பேருந்து நிலையம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி திட்டமிடப்பட்டது. இந்த திட்டத்திற்கு ரூ.130 கோடி செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழக முதல்வர் , இந்த பேருந்து நிலைய பணிகளை இந்த ஆண்டு 2025 இறுதிக்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டும் என உத்தரவிட்டுள்ளார். இந்த உத்தரவினை தொடர்ந்து இன்று நானும், எங்கள் துறையின் செயலாளர் அன்பிற்கினிய திருமதி. காகர்லா உஷா அவர்களும், தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமதி. வரலட்சுமி மதுசூதனன் அவர்களும், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. சினேகா அவர்களும், சிஎம்டிஏ உறுப்பினர் செயலாளர் பிரகாஷ் அவர்களும், சிஇஓ சிவஞானம் அவர்களும் ஆகியோர் இணைந்து களஆய்வினை மேற்கொண்டோம்.

இந்த பேருந்து நிலையம் இயங்கத் தொடங்கும்போது, சுமார் 600க்கும் மேற்பட்ட பேருந்துகள் தினமும் இங்கே வந்து செல்லவும் வாய்ப்பு உள்ளது. ஒரே நேரத்தில் 57 பேருந்துகள் நிற்கும் வசதி அமைக்கப்பட்டுள்ளது. பயணிகளுக்கு தேவையான குடிநீர் வசதிகள், கழிப்பறை வசதிகள், திடீரென உடல்நிலை பாதிப்பு ஏற்பட்டால் மருத்துவமனை வசதி, உணவகங்கள், தாய்மார்களுக்கான பாலூட்டும் அறைகள், இவை அனைத்தும் நவீன நாகரிக வசதிகள் மற்றும் பயணிகளின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

இங்கிருந்து இயக்கப்படும் பேருந்துகள், விழுப்புரம், திருச்சி, பெங்களூர், ஓசூர் ஆகிய ஊர்களுக்குச் செல்லும் வழித்தடங்களை பின்பற்றும். இந்த பேருந்து நிலையம் செயல்பட தொடங்கிய பின், சென்னையின் போக்குவரத்து நெரிசல் குறையும் என்பதில் எங்களுக்கு நம்பிக்கை உள்ளது. இந்த மாவட்ட மக்களுக்கு இது ஒரு மிகபெரிய நன்மையாக அமையும்.

'மாமல்லபுரம் பேருந்து நிலையம் மந்த நிலையில் பணிகள் நடைபெறுகிறது' என்று செய்தியாளர் கேள்விக்கு அமைச்சர் அளித்த பதில் :

இதைப்பற்றி பரவியுள்ள "மந்தமாக பணிகள் நடைபெறுகின்றன" என்ற குற்றச்சாட்டுகள் உண்மை அல்ல. புவியியல் அமைப்பு (ASI) சார்ந்த அனுமதிக்காக அத்தியாவசியமான தகவல்களை எங்கள் துறையின் செயலாளர், உறுப்பினர் செயலாளர் மூலம் ஏ.எஸ்.ஐ. (ASI) அலுவலகத்திற்கு சமர்ப்பித்து, அனுமதியும் பெற்றுள்ளோம். இதனடிப்படையில் வேலைகள் விரைவாக முன்னேற்றப்பட்டு வருகின்றன. 2026 ஜனவரி மாதத்திற்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

தற்போது அமைக்கப்பட்டு வரும் குத்தம்பாக்கம் பேருந்து நிலையம், செங்கல்பட்டு பேருந்து நிலையம், மாமல்லபுரம் பேருந்து நிலையம், ஆவடி புதிய பேருந்து நிலையம் இவற்றில் மலிவுவிலை உணவகங்கள் நிச்சயமாக செயல்படுத்தப்படும். இதற்காக கிளாம்பாக்கத்தில் உள்ள சுயதொழில் செய்பவர்களை அணுகி, சமைப்பதற்கான இடங்களை கேட்டு வருகின்றோம். சாத்தியமான வழிமுறைகளை ஆய்வு செய்து வருகிறோம். உங்கள் கோரிக்கையும், ஆலோசனையும் நிச்சயமாக நிறைவேற்றப்படும்.

இவ்வாறு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் திருமதி.வரலட்சுமி மதுசூதனன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர்/ முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.தி. சினேகா, சார் ஆட்சியர் திருமதி.எஸ்.மாலதி ஹெலன், சிஎம்டிஏ தலைமைத் திட்ட அமைப்பாளர் எஸ். ருத்ரமூர்த்தி, தலைமை பொறியாளர் மகாவிஷ்ணு, கண்காணிப்பு பொறியாளர் பாலமுருகன், செங்கல்பட்டு மாவட்ட வருவாய் அலுவலர் கணேஷ்குமார், தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்து கழகம் (விழுப்புரம்) பொது மேலாளர் கிருஷ்ணமூர்த்தி, ஆலப்பாக்கம் வனக்குழுத் தலைவர் திருமலை மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

### மண், மானம், மொழியைக் காக்க "ஓரணியில் தமிழ்நாடு"

# கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது!

கன்னியாகுமரி, ஜூலை 4-

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி, கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மண், மானம், மொழியைக்காக்க "ஓரணியில் தமிழ்நாடு"மாபெரும்பொதுக் கூட்டம் 02.07.2025, புதன்கிழமை அன்று மாலை 5.00 மணிக்கு நாகர்கோவில், செம்மாங்குடி சாலையில் வைத்து கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச்செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சிமேயர்ரெ.மகேஷ் தலைமையிலும், கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட அவைத் தலைவர் எப்.எம். இராஜரத்தினம், மாவட்ட பொருளாளர் ஐ.கேட்சன், மாவட்ட துணை செயலாளர்கள் எம்.சோமு, ஏ.ஆர்.பூதலிங்கம் ஆகியோர் முன்னிலையில்நடைபெற்றது.

கூட்டத்தில் மேயர் ரெ. மகேஷ் கழக அரசின் நான்காண்டு சாதனைகளை மக்களிடம்வீடுவீடாககொண்டுசேர்த்தல் பற்றியும், புதிய உறுப்பினர்கள்சேர்க்கையினை பற்றியும், கன்னியாகுமரி மாவட்டத்தில் கழக அரசின் வளர்ச்சிபணிகள்குறித்தும்மற்றும் இந்து சமய அறநிலையத் துறைமூலமாகதிருக்கோயில்களுக்கு பல கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் திருப்பணிகளையும் பட்டியலிட்டு சிறப்புரை யாற்றினார்.

கூட்டத்தில் மாநில மகளிர் அணிசெயலாளர்ஜெ.ஹெலன் டேவிட்சன், கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை செயலாளர்என்.தில்லைசெல்வம்,தலைமைக்கழகவழக்கறிஞர்ஏ.என். லிவிங்ஸ்டன், ஒன்றிய கழக செயலாளர்கள் பா.பாபு, த. செல்வன், அ.லிவிங்ஸ்டன், ஏ.சுரேந்திரகுமார், பி.எஸ். பி.சந்திரா, ச.சுந்தர்சிங்,, நகர கழக செயலாளர்கள் என். நாகூர்கான், குமரி ஸ்டீபன், பகுதிகழகசெயலாளர்கள்என். பி.துரை, த.ஜீவா, மு.சேக்மீரான் உட்பட ஒன்றிய, நகர, பகுதி கழக நிர்வாகிகள், தலைமைச்செயற்குழு,பொதுக்குழு உறுப்பினர்கள், பேரூர், வட்ட,கிளைகழகநிர்வாகிகள், உள்ளாட்சிஅமைப்புகளின்பிரதிநிதிகள்,கழகஅனைத்துசார்பு அணிகளின் நிர்வாகிகள், வாக்குச்சாவடி பாகமுகவர்கள்(BLA 2), வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்கள் (BDA), பாக குழு உறுப்பினர்கள் (BLC), கழக முன்னோடிகள், கழக உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்டஅனைவரும்கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, காஞ்சிபுரம் மாநகரம், 1வது பகுதி, 7வது வட்டம், பாக எண்.108ல் கழக கொள்கைப் பரப்புச் செயலாளர், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன் இல்லத்தில் "ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை முகாம் துவக்கப்பட்டது. நிகழ்வில், சட்டமன்ற உறுப்பினர், அவரது துணைவியார், மகன்கள் தி.மு. கழகத்தில் உறுப்பினர்களாக தங்களை இணைத்துக் கொண்டனர். உடன், 1வது பகுதி கழக செயலாளர் கே.திலகர், 6, 7, 8, 18 வட்டங்களுக்கான தேர்தல் ஒருங்கிணைப்பாளர் வி.எஸ். இராமகிருஷ்ணன், தகவல் தொழில்நுட்ப அணி சட்டமன்ற தொகுதி ஒருங்கிணைப்பாளர் அரவிந்த்குமார், வட்டச் செயலாளர்கள் எஸ். வரதன், எஸ். செந்தில், டி. ஜெய்கணேஷ், கே. சண்முகம், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் ப. சுகுமார், பகுதி இளைஞரணி அமைப்பாளர் ஆர். சந்திப்குமார், கே.அஞ்சுகம், சித்ரா ராமசந்திரன் எம்.சி. , வட்ட கழக நிர்வாகிகள், ஏராளமான கழக நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.



சென்னை கிழக்கு மாவட்டம் அம்பத்தூர் தெற்குப் பகுதி 89வது வட்டம். ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை செயலியை கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் துவக்கி வைக்க, சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே. சேகர்பாபு எம்எல்ஏ, அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல் எம். எல்.ஏ., 7வது மண்டலக் குழுத் தலைவர் பி.கே மூர்த்தி எம் சி, தெற்குப் பகுதிச் செயலாளர் டி எஸ் பி. இராஜகோபால் எம்.சி. வழிக்காட்டுதலின்படி நேற்று (03.07.2025 ) 89–வது வார்டில், ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை நிகழ்ச்சியில், வட்டக் கழகச் செயலாளரும் மாமன்ற உறுப்பினருமாகிய எம்.இ.சேகர் மற்றும் கழக நிர்வாகிகள், BDA, BLA2 பாக நிலை முகவர்கள் , BLC முகவர்கள், வட்ட இளைஞரணி, மகளிர் அணி கலந்துக் கொண்டு 89வது வார்டுக்குட்பட்ட 254வது பாகத்தில் வீடு வீடாக சென்று உறுப்பினர்களை சேர்த்தனர்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் உத்திரமேரூர் ஒன்றியத்தில் உள்ள கிராமப் பகுதிகளில் வீடு வீடாக காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. சென்று ஓரணியில் தமிழ்நாடு பரப்புரை மேற்கொண்டார். ஒன்றிய செயலாளர் ஞானசேகரன், பேரூர் செயலாளர் பாரிவள்ளல், பொதுக்குழு உறுப்பினர் சசிகுமார், கவுன்சிலர் ருத்ரக்கோட்டை, ஊராட்சி மன்ற தலைவர் மங்களகௌரி வடிவேலு உள்ளிட்ட ஏராளமான உடன் இருந்தனர்.

### சித்தாந்தத்தின் அடிப்படையிலேயே ஒன்றிய அரசு செயல்பட்டு வருகிறது!

# அனைவரும் சமம் - மதச்சார்பின்மை என்ற கொள்கையை ஆர்.எஸ்.எஸ் என்றும் ஏற்றுக்கொள்ளாது!

## நெல்லையில் - சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு பேட்டி!

நெல்லை, ஜூலை 4-

அனைவரும் சமம் மதச்சார்பின்மை என்ற கொள்கையை ஆர்.எஸ்.எஸ் என்றும் ஏற்றுக்கொள்ளாது. இந்த சித்தாந்தத்தின் அடிப்படையிலேயே ஒன்றிய அரசு செயல்பட்டு வருகிறது நெல்லையில் சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு செய்தியாளர் களிடம் பேட்டியின் போது தெரிவித்தார்.



தமிழகத்தில் கட்டி முடிக்கப்பட்ட ஆரம்ப மற்றும் நகர்ப்புற சுகாதார நிலையங்கள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதனை சென்னையில் இருந்து காணொளி காட்சி வாயிலாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்கள். நெல்லை மாவட்டத்தில் 5.40 கோடி ரூபாய் மதிப்பில் நெல்லை மாநகராட்சி மற்றும் அம்பாசமுத்திரம் நகராட்சி ஆகியவையில் அமைக்கப்பட்டுள்ள 12 நகர்ப்புற சுகாதார நல மையங்கள், இராதாபுரம் மற்றும் திருநெல்வேலி நகர பகுதியில் உள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளிட்ட 14 புதிய கட்டிடங்கள் திறக்கப்பட்டது.

இதன்தொடர்ச்சியாக நெல்லை, தச்சநல்லூர் சிதம்பரநகர் பகுதியில் அமைந்துள்ள நகர்நல மையத்தில் நடந்தநிகழ்ச்சியில் சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு, நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப், மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார் மாநகராட்சி ஆணையாளர் மோனிகா ராணா உள்ளிட்டோர் கலந்து கொண்டு நகர் நல மையத்தில் குத்து விளக்கு ஏற்றி மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தனர். தொடர்ந்து கர்ப்பணித்தாய் மார்களுக்கு மருந்துகள், ஊட்டச்சத்து பொருட்கள் அடங்கிய பெட்டகமும் வழங்கப்பட்டது.

பின்னர் சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சராக மு.க. ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற பின்பு தமிழக சுகாதாரத்துறை மிகப்பெரிய வளர்ச்சியை பெற்றுள்ளது. மக்களை தேடி மருத்துவம் திட்டம் தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வரும் நிலையில் ஐ.நா சபை இதனை பாராட்டி விருது வழங்கியுள்ளது. மகப்பேறு காலங்களில் எந்தவித பிரச்சனையும் இல்லாமல் கர்ப்பிணி பெண்கள் குழந்தை பேறு நடப்பதற்கான அனைத்து முயற்சிகளும் மருத்துவர்கள் மூலம் கண்காணித்து நடவடிக்கை மேற்கொள்வதற்கு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

2021 ஆம் ஆண்டு காலகட்டத்தில் தமிழகத்தில் இருந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள், ஆரம்ப பள்ளி,சமுதாய நலக்கூடங்கள் அனைத்தும் மிகவும் மோசமான நிலையில் இருந்தது, என்பதை அனைவரும் அறிந்தது. தி.மு.க அரசு பொறுப்பேற்ற பின்னர் அனைத்தும் புதுப்பிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.அனைவரும் சமம், மதச்சார்பின்மை ஆகிய இரண்டையும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் இருந்து நீக்க வேண்டும் என ஆர்.எஸ்.எஸ் பொதுச் செயலாளர் பாலே தெரிவித்த கருத்து குறித்து செய்தியாளர்கள் கேட்டதற்கு அனைவரையும் இந்துக்களாக அவர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் 10% உயர் ஜாதியினருக்கு அனைத்து சலுகைகளும் கிடைக்க வேண்டும் அவர்களுக்கே முன்னுரிமை இருக்க வேண்டும் என்றே அவர்களின் செயல்பாடுகள் இருக்கும். அனைவரும் சமம், மதச்சார்பின்மை என்ற கொள்கையை ஆர்.எஸ்.எஸ் என்றும் ஏற்றுக் கொள்ளாது. இந்த சித்தாந்தத்தின் அடிப்படையிலேயே ஒன்றிய.அரசு செயல்பட்டு வருகிறது.

பா.ம.க. எம்.எல்.ஏ. அருள் நீக்கப்பட்ட விவகார குறித்த கேள்விக்கு அவர்களே (பேசி) முடித்துக் கொள்வார்கள் என பதலளித்தார். திருப்பு வனம் லாக்கப் டெத் குறித்த கேள்விக்கு,இந்த சம்பவம் வன்மையாகக் கண்டிக்கக் கூடியது. மனசாட்சி உள்ள யாரும் ஏற்றுக் கொள்ள முடியாது. முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்தவுடன் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளின் மீது உடனடியாக வழக்கு பதிவு செய்யபட்டுள்ளது. சம்பந்தப்பட்டவர் யாராக இருந்தாலும் முதல்வர் அவர்கள் விட மாட்டார். மக்களுக்கு விரோதமாக சட்டத்திற்கு புறம்பாக யார் யார் தவறு செய்தாலும் தயவு தாட்சனை இல்லாமல் நடவடிக்கை எடுப்பார். சாமானியன் வீட்டில் அரசு அதிகாரிகள் செய்த சிறிய தவறை அதற்கு பொறுப்பேற்று முதலமைச்சர் அவர்கள் பாதிக்கபட்டவர்கள் குடும்பத்தினரிடம் வருத்தம் தெரிவித்தார். இந்த பண்பு மிகப் பெரிய மாண்பு.இதனை அரசியலுக்காக பலர் கொச்சைப் படுத்தி பேசிவருகின்றனர்.

நம்முடைய முதல்வர் அவர்கள் இவ்வளவு பெரிய மாண்புடன் சம்பவம் தவறு என்று உணர்ந்தவுடன் தாயாரிடம் சகோதரனும் வருத்தத்தை தெரிவித்திருக்கிறார்கள்.என்பதை மக்கள் நினைக்கிறார்கள். பெருமையாக நினைக்கிறார்கள்.

இவ்வாறு சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் மேயர் ராம கிருஷ்ணன், துணை மேயர் ராஜூ, மாவட்ட ஊராட்சி தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி

# புதுச்சேரி - காரைக்கால் மாநில அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள்கள் நியமனம்!

## விவசாயத் தொழிலாளர் அணிச் செயலாளர் அன்னியூர் சிவா அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி – **புதுச்சேரி – காரைக்கால்** மாநில அமைப்பாளர் ஒப்புதலோடு, தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணியின் அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**புதுச்சேரி - காரைக்கால் மாநிலம்**

தலைவர் - எம்.எம். மாரியப்பன் 12, ஓம் சக்தி நகர், வரிச்சிக்குடி, காரைக்கால்.

துணைத் தலைவர் - டி. பரணி (எ) காளிமுத்து 8, மெயின் ரோடு, கீழநெடுங்காடு, நெடுங்காடு, காரைக்கால்.

அமைப்பாளர் - வி. வினோத்குமார் 22, மாதா கோவில் வீதி, வடமட்டம், நெடுங்கால், காரைக்கால்.

துணை அமைப்பாளர்கள் - 1) கிரி (எ) எஸ். வரதராசன் 18, தெற்கு தெரு, விழுதியூர், காரைக்கால். 2) ஆர். பக்கிரிசாமி 194, மெயின் ரோடு, வரிச்சிக்குடி, காரைக்கால்.

3) எம். தென்னரசு 23/பி, ஐயனார் கோவில் தெரு, திருவேட்டக்குடி, காரைக்கால். 4) எஸ். ரவிந்திரன் 62, மெயின் ரோடு, திருவேட்டக்குடி, காரைக்கால். 5) எஸ். முத்துராமன் 20, வி.ஓ.சி. நகர், வரிச்சிக்குடி, காரைக்கால்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 03-07-2025.

**அன்னியூர் சிவா**
செயலாளர்
தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி



ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை விருகம்பாக்கம் தொகுதி, கலைஞர் நகர் வடக்கு பகுதி, 128வது வட்டத்தில் பகுதி செயலாளர் மு.இராசா தலைமையில், தொகுதீ பொறுப்பாளர் வே.உமாகாந்த், மாமன்ற உறுப்பினர் ரத்னா லோகேஷ்வரன், வட்ட செயலாளர் மு.கோவிந்தராஜன், பகுதி துணை செயலாளர் நாகராஜ், பகுதி துணை செயலாளர் வாட்டர் விஜயகுமார், பகுதி பொருளாளர் துரை ரஞ்சித்குமார் மற்றும் BL2 சிவஜோதி, BDO ஜெயபிரகாஷ் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



மாமல்லபுரம் நகர திமுக மற்றும் இளைஞர் அணி சார்பில் நகர அமைப்பாளர் நகர மன்ற உறுப்பினர் மாமல்லபுரம் மோகன்குமார் விஸ்வநாதன் எம்.சி. தலைமையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்த நாள் விழா மற்றும் நாடு போற்றும் நான்காண்டு திராவிட மாடல் அரசு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டம் தலைமைக் கழக பேச்சாளர் வண்ணை புகாரி, இளம் பேச்சாளர் மரு.மா.பூபதி, நகரக் கழக செயலாளர் வெ.விஸ்வநாதன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வி. விஜயகுமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். இதில் நகர கழக, வட்டக் கழக நிர்வாகிகள், நகர மன்ற உறுப்பினர்கள், இளைஞரணி, மாணவரணி, தகவல் தொழில்நுட்ப அணி, மகளிர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.